# முல்லைப்பாட்டு பெண்ணின் வாழ்வியலும் பாசறையின் சிறப்பும்

*பா. தாரணி*
முதலாமாண்டு முதுகலைபட்ட மாணவி, தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783303

***ஆய்வுச் சுருக்கம்***

*இன்றைய காலத்தில் மக்களாட்சி மலர்ந்து இந்த உலகம் இயங்கிக் கொண்டு வருகிறது. ஆனால் பண்டைய காலத்தில் மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். பெண்கள் சுதந்திரமாக இருந்தார்கள். பெண்கள் மனிதநேயத்தை கொண்டவர்களாக இருந்தார்கள். மன்னர்கள் வீரத்தையும், மானத்தையும் தன் உயிரினும் மேலாக கருதினர். அந்த வகையில் முல்லை நிலத்தின் பெண்களின் வாழ்வியலையும், நாட்டின் சிறப்பையும் வீரத்தையும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.*

***கலைச் சொற்கள்:*** *முல்லைப்பாட்டு, வீரம், மானம், மனிதநேயம்.*

## முன்னுரை

*சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டில் அகநூல் வகையைச் சார்ந்தது முல்லைப் பாட்டாகும். இதனை நம்பூதனார் இயற்றினார். இது 103 அடிகளைக் கொண்டது. இந்த முல்லைப்பாட்டு நம் மனதை மெருகூட்டும் வகையில் வருணனைகள் அமைந்துள்ளன. இந்த வகையில் மன்னர்களது வாழ்வியலையும் பெண்களின் வாழ்வியலையும் ஆராய்வதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.*

## முல்லை நிலத்தின் அமைப்பு

*தமிழர்கள் நிலத்தினை ஐந்து வகையாக பிரிக்கின்றனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நிலத்தின் தன்மைக்கு ஏற்ப பிரித்துள்ளனர். அந்த வகையில் முல்லை நிலமானது குளிர்ந்த கடல் நீரை குடித்து வாழும் அழகிய மேகத்தினைக் கொண்டு வருவது மழையாகும். இந்த மழைக்காலத்தை கொண்டது முல்லை நிலம் இதனை,*

***காடும் மாலையும் முல்லை***[1]

*என்ற தொல்காப்பியரின் இலக்கணத்தில் அறியலாம்.*

***'நனந்தலை உலகம் வளைன, நேமியொடு***
***வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை***
***நீர் செல நிமிர்ந்த மாஅல் பேரி'***

***- (முல்லை.பா.வ.1-3)***

*இந்த வரியில் நீர் என்ற துணியினை குறிப்பதால் முல்லை நிலத்தின் அமைப்பு நீர் நிலை கொண்ட செல்வ செழிப்பாக இருக்கிறது என அறிய முடிகிறது.*

## முல்லை நிலத்தின் தெய்வம், தொழில்

*முல்லை நிலம் காடும் காடு சார்ந்த இடமாக இருப்பதால் அங்கு ஆநிரைகள் அதிகமாக உள்ளன. ஆகையால் முல்லை நிலத்தின் மக்கள் ஆநிறையை மேய்க்கும் தொழிலை கொண்டுள்ளனர். முல்லை நிலத்தின் தெய்வமாக,*

***'வலம்புரி வாணந்த மாதாங்கு தடக்கை***
***நீர்செல நிமிர்த்த மால் போல***
***பாடு விமிழ் பணிக்கடல் பருதுவண் ஏர்ப்'***

***- (முல்லை.பா.வ.2-4)***

*திருமால் என்று மேற்கொண்ட வரிகளில் மால் என்ற வரியில் அறிய முடிகிறது. இதனையே,*

***மாயோன் மேய காடுணி உலகம்***[2]

*மாயோன் என்றால் திருமாலைக் குறிக்கும். காடும் காடு சார்ந்த இடமும் முல்லை ஆகையால் மேற்கண்ட செய்தியினை தொல்காப்பியர் தனது இலக்கணத்தில் கூறியுள்ளார். ஆகையால் முல்லை நிலத்தின் கடவுள் திருமால் என உறுதியாக கூற முடிகிறது.*

### முல்லை நிலத்து மகளிர்

முல்லை நிலத்து மகளிர் ஆநிரைகளை மேய்ப்பவர் ஆவர். இது இவர்களின் தொழிலாகும். பச்சிளங் கன்றுகள் பாலுண்ணாமையிலே இருக்கின்றன. அதனைப் பார்த்த மகளிர் அந்த குளிரிலும் அந்த கன்றினைப் பார்த்து ஆறுதல் சொல்கின்றனர்.

**'சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமறல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையன் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின்று உயர்தர
இன்னே வருகுவர் நாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்'**

- (மு.பா.வ.12-17)

சிறுதாம்பு கொடுத்த பச்சை கன்றின் ஐந்தறிவு உயிர் என்றாலும் தன்னைப் போல ஒரு உயிர் தான் என்று கருதி அதனை அன்போடும், பாசத்தோடும் வளர்த்திருக்கிறார்கள் என்று அறியலாம். முல்லை நிலத்து மக்கள் மனித நேயம் கொண்டவர்கள் என்பது இதன் மூலம் அறிய முடிகிறது.

### முல்லை நிலத்து செல்வ வளம்

முல்லை நிலத்து மக்கள் இயற்கையை பெரிதும் நேசித்தார்கள். தங்களின் உழைப்பினை சரியாக பயன்படுத்தி மண்வளத்தை சிறப்பாக வைத்திருந்தனர். இதன் மூலம் செல்வ செழிப்பாய் இருந்தது அந்நிலம். மதம் கொண்ட யானைகள் அவற்றிற்கு பிடித்த உணவுகள் முன்னால் இருந்தால் கூட அதனை விரும்பாது .அந்த எண்ணத்திற்கு யானை நினைக்காமல் இருந்திருக்கின்றது.

**'முதம்படு கவுல சிறுகண் யானை
ஓங்கு நிலை கரும்பொடு கதிர்மிடைத்து யாந்த
வயல்வினை இன்குளகு உண்ணாது நுதல் துடைத்து
அயில் நுனை மருப்பின் தம் கையிடைக் கொண்டென'**

- (மு.பா.வ.31-34)

என்ற வரிகளின் மூலம் முல்லை நிலத்தின் செல்வ வளத்தை நாம் அறியலாம்.

### அரசரது பாசறை

பாசறை என்பது போர் நடக்கும் இடத்தில் அமைக்கப்படும் அரன். அந்த அருணுக்கு நடுவே அரசனது பாசறை அமைந்திருக்கும் என்பதை,

**'வேறுபல் பெரும்படை நாப்பான் வேறுகர்
நெடுங்காழ்க் கண்டம்கோலி அதம்தேர்பு'**

- (மு.பா.வ.43-44)

என்ற வரிகளில் அறியலாம்.

### விளக்கு வைக்கும் மரபு

மரங்கள் தனது நிழலை மடித்துக் கொள்ளும் நேரம் வந்துவிட்டது காரணம் கதிரவன் மறைந்து விட்டான். இரவு நேரம் வந்துவிட்டது. பாசறையில் இரவை பகலாக்கும் வகையில் பாவை விளக்கில் தீபம் ஏற்றி வைத்தனர்.

**'விறகுவகை கச்சின் நீண்ட மங்கையர்
நெய் உமிழ் தரையர் நெடுந்துறைக் கொளீஇ
கையமை விளக்கம் நந்துதொறும் மாட்ட'**

- (மு.பா.வ.41-48)

என்ற வரிகளில் முல்லை நிலத்து மக்கள் பகலாக்கும் வேளையில் ஈடுபட்டு விளக்கு ஏற்றினர் என்பது நம்மால் அறிய முடிகிறது.

### பாசறையின் வெற்றி

படையெடுத்துச் சென்றவர்கள் தங்கிப்போர் புரிவதற்காக அமைந்துள்ள இடம் பாசறை ஆகும். வெற்றி பெற்ற பிறகு பாசறையில் வெற்றி முழக்கம் சூடுவர். இதனை,

**'பகைவர் கட்டிய படைகொள் நோன்விரல்
நகைத்தாழ் கண்ணி நல்வலம் திருத்தி
அரசு இருந்து பணிக்கும் முரசுமுழக்க பாசறை'**

- (மு.பா.வ.77-79)

என்ற வரிகளில் அறியலாம். இந்த செய்தியினை புறப்பொருள் வெண்பாமாலையில், அவனை பகையரசர் அனைவரும் எதிர்த்து போர் புரியும் ஆற்றலை இழந்தனர். அதனால் திங்களைப் போல ஒளி வீசும் வஞ்சி வேந்தன் வெண் கொற்றக் குடையினை புகழ்ந்து பேசி பணிந்து நின்றனர். பகைவர் அடிமையான பின்பும் வஞ்சி வேந்தன் தன்னுடைய

*நாட்டிற்கு செல்லாமல் அப்பாசறையின்கண் தங்கியிருப்பான்*

*என்ற வரிகளில் பாசறையின் இருந்து வெற்றினை முழக்கத்தோடு கொண்டிருப்பர் என்பதை அறியலாம்.*

**முடிவுரை**

*பத்துப்பாட்டில் ஒன்றான முல்லைப்பாட்டில் தமிழர்களின் வாழ்வியலை மிக நுட்பமாக எடுத்துரைக்கிறது. பெண்களின் வாழ்வியலையும், மன்னர்களது பாசறையின் அமைப்பு, போர் வீரம், முல்லை நிலத்து செல்வ செழிப்பு பற்றியும் நம்மால் இந்த ஆய்வு மூலம் அறிய முடிகிறது.*

**சான்றெண் விளக்கம்**

1. *முனைவர்.ச. திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருள், நூ.6.*
2. *மேலது, நூ.5.*
3. *முனைவர். ச. திருஞானசம்பந்தம், புறப்பொருள் வெண்பா மாலை, ப.66-67.*

**துணை நூற்பட்டியல்**


1. *திருஞானசம்பந்தம். ச. முனைவர் - தொல்காப்பியம் பொருளும் மூலமும் உரையும் கதிர்பதிப்பகம், 93, தெற்கு வீதி, திருவையாறு - 613 204.*
2. *திருஞானசம்பந்தம். ச. முனைவர் - புறப்பொருள் வெண்பாமாலை கதிர்பதிப்பகம், 93, தெற்கு வீதி, திருவையாறு - 613 204.*